பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: சித்திரை 31 (13—5—68) திங்கள் ★ வெளியூர்: வைகாசி 1 (14—5—68) செவ்வாய் [இதழ்: 275

# நினைவிலிருந்து நீங்காத வரவேற்பு

## உலகை வலம் வந்த அண்ணாவுக்கு மக்களின் உளங்கனிந்த வாழ்த்து

### விமான நிலையத்தில் எழில் மிக்க காட்சிகள்

சென்னை, மே 13—

“ எந்த மாநில அமைச்சரும் பெறாத — பெறமுடியாத கௌரவத்தைப் பெற்று, நமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவரான முதலமைச்சர் அண்ணா அவர்கள் ஊர் திரும்பி வருகிறார்கள்; வரவேற்புகளும் பாராட்டுகளும் வரம்பு மிஞ்சி நடைபெறும்; உலகம் சுற்றுவதனால் அடையக்கூடிய அறிவும் நிறைய அடைந்து திரும்புகிறார்; இது தமிழ்நாட்டின் பாக்கியம் ”

என்ற மூதறிஞர் இராஜாஜி அவர்களின் பெரும் வாழ்த்துடனும், மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து அவரது இல்லம் செல்லும் வழி முழுவதிலும் திரண்டிருந்து, 'அண்ணா வாழ்க' என்று அன்புக் குரல் எழுப்பிய மக்களின் பேரார்வ ஒலியுடனும் கடந்த 27 நாட்களாக உலகை ஒரு முறை வலம்வந்த முதலமைச்சர் அண்ணா அவர்கள், நேற்றிரவு 9-50 மணியளவில், நலமுடன் தமிழகம் வந்து சேர்ந்தார்.

ஏப்ரல் 15-ம் நாளன்று சென்னையிலிருந்து புறப்பட்ட அண்ணா அவர்கள்—ரோம், பாரிஸ், அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜப்பான், ஹாங்காங், சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து, அந்த நாடுகளின் பெருமக்களால் வாயார — மனதார வாழ்த்தும், பாராட்டுதல்களும் பெற்றுத் தாயகம் வந்து சேர்ந்த அவரை, நேற்றிரவு தமிழக மக்கள் அன்பு ததும்ப—ஆர்வம் பொங்க வரவேற்ற பெருமிதச் செய்தி, அவர் சுற்றுப்பயணம் செய்த நாடுகள் அனைத்திலும் இன்று எதிரொலித்துக்கொண்டிருக்கிறது!

சுற்றுப்பயணத் திட்டப்படி அல்லாமல் மூன்று நாட்களுக்கு முன்னரே அவர் தாய்நாடு திரும்பவேண்டியிருந்த செய்தி ஒரு கிழமைக்கு முன்னரே தெரிந்துவிட்டதால், மாநிலம் முழுவதிலுமிருந்தும் மக்கள் முதலமைச்சர் அண்ணா அவர்களை வரவேற்கவும், ஊர்வலத்திலும் பொதுக்கூட்டத்திலும் கலந்துகொள்ளவும் சென்னையில் திரண்டனர்.

விமான நிலையத்தில்—அரசு அதிகாரிகள், உத்தியோகச் சார்பற்ற பிரமுகர்கள், பல நாடுகளின் தூதுவர்கள், நாடாளுமன்ற – சட்டமன்ற – மாநகராட்சிமன்ற உறுப்பினர்கள், மாவட்ட — வட்ட — பகுதிச் செயலாளர்கள் உள்ளிட்ட பலரும் குழுமியிருந்த நிலையில், அண்ணா அவர்கள் பயணம் செய்த போயிங் விமானம் வந்திறங்கியபோது மக்களிடமிருந்து எழும்பிய ஆரவாரப் பேரொலி அடங்குவதற்கு பல நிமிடங்களாயிற்று!

விமானத் திடலிலிருந்து அண்ணா அவர்கள் தம்முடைய இல்லம் செல்லும் பாதை முழுவதிலும்---இரவு நேரமாக இருந்தும்---பொதுமக்கள்---மகளிரும் மழலைகளும்---திரண்டிருந்து அவருக்கு வாழ்த்துக்கூறிய காட்சி, என்றென்றும் நம்முடைய நினைவிலிருந்து நீங்காத ஒன்றாகும்!

சிங்கப்பூரிலிருந்து அண்ணா அவர்கள், ஏர் இந்தியா போயிங் விமானத்தில் வந்திறங்கினார்.

நகரம் முழுவதிலிருந்தும், மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்தும் திரண்டிருந்த மக்கள், விமானம் வந்திறங்கியதும், 'அண்ணா வாழ்க' என்று குரலெழுப்பி முழங்கினர்.

புன்னகை பூத்த முகத்துடன் அண்ணா அவர்கள், விமானத்தை விட்டிறங்கியதும், அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, கே.ஏ. மதியழகன், செ. மாதவன், மா. முத்துசாமி, சாதிக் பாட்சா, அமைப்புச் செயலாளர் என்.வி. நடராசன், நாடாளுமன்ற மக்களவை தி.மு.க. குழுத் துணைத்தலைவர் கி. மனோகரன் ஆகியோர் மலர்மாலைகள் அணிவித்து வரவேற்றனர்.

சட்டப் பேரவைத் தலைவர் ஆதித்தனார், மேயர் டாக்டர் அபிபுல்லா பேக், மற்றும் முஸ்லிம் லீக்—சுதந்தரா—பிற கட்சியினரும் வரவேற்றனர்.

அண்ணா அவர்களை வரவேற்க அமெரிக்கத் தூதுவா[illegible]டர் ஆல்பர்ட் பிராங்கிளின் ஜப்பானியத் தூதுவரக அதிகாரிகள் பலரும் வந்திருந்தனர்.


மாவட்டச் செயலாளர்களும், நாடாளுமன்ற — சட்டமன்ற— மாநகராட்சி மன்ற உறுப்பினர்களும், கழகத் தோழர்களும் மலர் மாலைகள் அணிவித்து மகிழ்ந்தனர்.

அண்ணா அவர்கள் திறந்த ஜீப் வண்டியில் ஏறி மக்கள் திரண்டிருந்த இடத்தை நோக்கிச் சென்றார்கள்.

அண்ணாவைக் கண்டதும் கூடியிருந்த மக்கள் மாலையணிவித்து 'அண்ணா வாழ்க' என விண்ணதிர முழங்கினர்.

ஜீப்பில் நின்றபடியே அண்ணா அவர்கள் கரம் கூப்பி, அனைவருக்கும் வணக்கம் தெரிவித்துக் கொண்டார்.

பிறகு அண்ணா அவர்கள், முக்கிய பிரமுகர்கள் கூடியிருந்த இடம் நோக்கி, ஜீப்பிலேயே சென்றார்கள். அங்கும் ஏராளமான மாலைகள் அணிவிக்கப் பட்டன.



பிறகு, அண்ணா ஜீப் காரிலேயே விமான நிலையத்தை விட்டுப் புறப்பட்டார்கள்.

அண்ணா அவர்களுடன் அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன், அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன், அன்பில் தர்மலிங்கம் ஆகியோரும் ஜீப் காரில் வந்தனர்.

வழி நெடுகிலும் ஆங்காங்கே ஏராளமானோர் அந்த நள்ளிரவிலும் கூடி நின்று அண்ணா வண்டியைக் கண்டதும் வாழ்த்து முழங்கி வரவேற்றனர்

### எம்.ஜி.ஆர். வரவேற்பு

விமான நிலையத்திலிருந்து சென்னை நோக்கி வரும் வழியில் ஆலந்தூர் அருகில் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களால் சிறப்பானதோர் வரவேற்பு அளிக்கப்பட்டது.

வண்ண எழுத்துக்களால் எழுதப்பட்ட வரவேற்பு வளைவுகளும், உதயசூரியன் போன்ற ஒளி விளக்குகளும் ஏராளமாக வழியெல்லாம் அங்கு அமைக்கப் பட்டிருந்தன. பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமியிருந்தனர். இசைக் கருவிகள் வாழ்த்துப் பா இசைத்தன.

அண்ணா அவர்களின் கார் அந்த வரவேற்பு வளைவுக்குள் வந்ததும் எம். ஜி. ஆர். அவர்கள் அண்ணாவை கைகூப்பி எதிர்கொண்டழைத்தார். ஆள் உயர மல்லிகை மாலையும், ரோஜா மாலையும் அணிவித்துப் பொன்னாடையும் போர்த்தினர்.

### வேளச்சேரி சாலையில்

அண்ணாவின் கார் வேளச்சேரி சாலையில் துவங்கும் சதுக்கத்துக்கு வந்ததும் அங்கே கூடி நின்றோர் காரை நிறுத்தி வரவேற்றனர்.

அங்கு தோரண வாயில் அமைத்து ஒளி விலக்குகளால் அலங்காரம் செய்திருந்தனர்.

மாநகராட்சி மன்ற உறுப்பினர் எம். கோபால் உட்பட கழகத் தோழர்கள் பலரும் கூடியிருந்து மாலையணிவித்து வரவேற்றனர்.

### சைதையில்....

அடுத்து சைதையில் மர்மலாங் பாலத்துக்கு அருகில் வரவேற்பு வளைவு அமைத்து, ஒளி விளக்கு அலங்காரத்துடன் அண்ணாவை வரவேற்றனர்---துணை மேயர் பவளவண்ணன், மாநகராட்சி உறுப்பினர்கள் சைதை சம்பந்தம், ஆர். டி. பாஸ்கரன், சா. கணேசன் ஆகியோர். அங்கு முரசொலி மாறன் எம்.பி. அவர்கள் ஆள் உயர மாலை யணிவித்து கூடியிருந்த மக்களில் வாழ்த்தொலி முழக்கத்துடன் வரவேற்றார்.

அடுத்து ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி எதிரிலும், பேன்பேட்டையிலும், இதே போன்று அலங்கார வளைவுகளுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது.

வெடிகள் வெடித்ததும், மேள வாத்தியத்துடனும் வரவேற்றார்கள்.

அண்ணா அவர்கள் நுங்கம்பாக்கத்தில் உள்ள தமது இல்லத்தை அடைந்ததும், அங்கு ஏற்கனவே கூடியிருந்த ஏராளமான மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தும், மாலையணிவித்தும் வரவேற்றார்கள்.

## அண்ணா வரவேற்பு திரைப்படமாகிறது!

சென்னை, மே 13—

அண்ணா அவர்கள் விமானத்திலிருந்து இறங்கியது முதல், மக்கள் வழியெங்கும் வரவேற்றது—அண்ணா அவர்கள் நுங்கம்பாக்கம் இல்லம் சேர்ந்தது வரையில் தமிழக அரசின் செய்தித் துறைத் திரைப்படப் பிரிவினர் ஒரு காரில் அமர்ந்து திரைப்படமாக்கினர்.

## அண்ணாவின் மகிழ்ச்சியும் நன்றியும்

சென்னை, மே 13—

“ தாயகம் திரும்பியது பற்றிப் பெரிதும் மகிழ்கிறேன்.

“ நகரிலிருந்தும் சுற்றுப்புறங்களிலிருந்தும் எனக்கு வரவேற்பு அளிக்க வந்திருந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கும் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.”

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## சோஷலிசம் தோற்றுவிட்டது!

### முதலாளிகளின் கைப்பாவை இந்திய அரசு!

ஆமதாபாத, மே 13—

“ இந்தியாவில் சோஷலிசம் தோற்றுவிட்டது!

“ அரசாங்கம், முதலாளிகளின் கைப்பாவையாகிவிட்டது!

“ நிறுவனக் கட்டுப்பாடு, மனிதத்தன்மை ஆகியவற்றிற்கு இப்போது மதிப்பே இல்லை!

“ பொதுமக்கள் கருத்தை உருவாக்கும் பத்திரிகைகள்கூட, பணத்தின் ஆதிக்கத்தின்கீழ் இருந்துவருகின்றன!

“ தனியார் துறை என்ற பாலைவனத்தில், சிறு அளவு பசுமை நிலம்போல் பொதுத் துறை (அரசுத் துறை) இருந்துவருகிறது! பாலைவனம் ஆதிக்கம் செலுத்துகிறது! பசுமை நிலம் வளர்ச்சியடைய பாலைவனத்தின் ஆதிக்கத்தை அகற்ற வேண்டும்!

“ நாட்டில் சோஷலிசம் ஏற்படுவதற்கான சமூக—பொருளாதாரச் சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

“ அரசுத்துறை — தனியார் துறை இரண்டும் இப்போது ஓய்வு பெற்ற அதிகாரவர்க்கத்தினராலேயே நடத்தப்படுகின்றன; அவர்களுக்கு, சமூக—பொருளாதார வளர்ச்சியில் சிறிதும் அக்கறை கிடையாது!”

இவ்வாறு, மத்திய அரசின் முன்னாள் தொழிலாளர் நல அமைச்சர் ஜி. எல். நந்தா அவர்கள் கூறியுள்ளார்.

## வெற்றிப் பயணம்!

### அண்ணா பெருமிதம்

சென்னை, மே 13—

‘ நான் மேற்கொண்ட இந்தப் பயணம், வெற்றிகரமாக அமைந்தது.

“ நான் சென்ற நாடுகளிலெல்லாம் மக்கள், பெரும் மகிழ்ச்சியுடன் என்னை வரவேற்றனர்”

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், செய்தியாளர்களிடம் பெருமிதத்துடன் கூறினார்.

நம் நாடு

ஆசிரியர்: இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 சித்திரை 31 (13—5—68) திங்கள்

# வருக! வருக! அண்ணு வருக!

முதலமைச்சராகத் தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள அறிஞர் அண்ணு அவர்கள், தமது அமெரிக்க – ஜப்பான் சுற்றுலாவை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பிவிட்டார்.

'எம் அண்ணலே வருக! அறிஞருள் அறிஞரே வருக! தமிழக முதல்வரே வருக!' என, இரு கரங்களைக் கூப்பி வரவேற்கின்றோம்.

சென்ற திங்கள் பதினைந்தாம் நாள், தமிழகத் தலைநகரை விட்டு விமானமூலம் பம்பாய் நகர் சென்று, அங்கிருந்து ரோம் நகரம் சென்றடைந்தார். அங்கு போப்பாண்டவரைச் சந்தித்தார்; அப்பெருந்தகையுடன் அளவளாவினுர்.

பின்னர், பாரிஸ் நகரம் சென்றுர். அந்த நகரத்தில் வரலாற்றுச் சிறப்புடைய பல இடங்களைக் கண்டார். பின்னர் தமது அமெரிக்கப் பயணத்தை அங்கிருந்து துவங்கினுர்.

நியூயார்க் நகரத்தின் ஜான் எப். கென்னடி விமானநிலையத்தை அடைந்த அறிஞர் அண்ணு அவர்களை வரவேற்க வந்திருந்த இந்தியர்களின் மனநிலை எப்படி இருந்தது—அண்ணு அவர்களுக்கு எத்தகைய வரவேற்பை அவர்கள் அளித்தனர்—என்பதை, அக்காட்சியை நேரில் கண்டவர் 'ஆனந்தவிகடன்' இதழில் எழுதியுள்ளதை இங்கு அப்படியே வெளியிடுகின்றோம்:—

"2-15 மணிக்கு வரவேண்டிய விமானம், ஒரு மணி முன்னதாக வந்துவிட்டது; எனினும், திரளான இந்தியர்கள் விமான நிலையத்தில் அங்குமிங்கும் சென்றுகொண்டும், பேசிக்கொண்டும் நிற்கிறுர்கள். 'வந்துவிட்டது, வந்துவிட்டது' என்ற குரல்கள். வரும் வழியை நோக்கி ஓட்டம். பெண்கள் பலர். குடும்பங்களுடன் சிலர். அதோ, ஐ. நா. தூதுவர் திரு. பார்த்தசாரதி, தமக்கே உரிய இனிய புன்முறுவலைத் தவழவிட்ட வண்ணம் நின்றுகொண்டிருக்கின்றுர். இந்தியாவின் நியூயார்க் பிரதிநிதி டாக்டர் குப்தா நின்றுகொண்டிருக்கின்றுர். பற்பல அதிகாரிகள் – பேராசிரியர்கள் – காமிராவைப் பிடித்த வண்ணம் நிருபர்கள்.

"குள்ளமான – சிறுதொந்திபடைத்த ஒருவர், ஏறுகொண்ட நடையுடன் – பீடுகொண்ட பார்வையுடன் – அகன்ற மீசை – அகல வெள்ளைப் பற்கள் முறுவலிக்கக் கைகூப்பி வருகிறுர்.

"'அண்ணு, அண்ணு! அதோ பாருங்கள் வருகிறுர்' என்று பேசும் குரல்கள், அவர் வரும் திசையை நோக்கின. பூமாலை போடுகிறுர்கள். **அவர்கள் முகத்தில்தான் எத்தனை மகிழ்ச்சி. 'அண்ணு என்ற சொல் ஒரு மந்திர வார்த்தை'** என்கிறுர் ஒரு தமிழர்—அருகிலுள்ள வெள்ளைக்காரரிடம்.

"'நான் நம்புகிறேன்' என்கிறுர் வெள்ளைக்காரர்."

இவ்வளவுதானு? இன்னும் உண்டு; மேலே படியுங்கள்.

"புடவை அணிந்து நிற்கும் சில அமெரிக்கப் பெண்மணிகள் நம் கவனத்தைக் கவருகின்றனர். தாடி அணிந்து முண்டாசு கட்டியிருக்கும் சிங்குகள் சிலர் ஆவலுடன் நோக்குகின்றனர். அண்ணுதுரையைக் கண்டதும், **அந்தக் கூட்டத்தில் ஓர் அலை—ஓர் துடிப்பு—ஓர் பிரகாசம்—ஓர் மகிழ்ச்சி! ஆர்வத்தை வெளியிட முடியாமல் நிற்கும் நிலை!**

"அண்ணு பலருடன் கைகுலுக்குகிறுர். 'நலமா?' என்ற அன்புமொழி. அவசரமாக விமான நிலையத்தில் தங்கள் அலுவல்களைப் பார்க்கப் போகிற அந்நியர்கள்கூட ஒரு கணம் நிற்கிறுர்கள் – 'என்ன இங்கே கூட்டம்? இந்தியாவின் பெரிய மனிதரோ?'

"**'ஆம்; நேருவின் பேச்சுக்கு அடுத்தபடியாகப் பெரும் கூட்டங்களை ஈர்க்கும் தென்னிந்தியாவின் தலைவர்!'**

"'யூ மீன் சௌத் இண்டியா?'

"எஸ்; மெட்ராஸ்."

அண்ணு அவர்களின் திருநாமம், ஏப்ரல் முதல்நாள் முதற்கொண்டு, 'அமெரிக்காவில் தமிழர்கள் இருக்குமிடமெல்லாம் எதிரொலித்தது. கலிபோர்னியாவிலிருந்து நியூயார்க்வரை—டெக்சாசிலிருந்து மில்வாக்கிவரை—தமிழர்களில் பலர் போன்மூலம் கூப்பிட்டுக்கொண்டிருந்தார்கள்.'

நியூயார்க் நகரத்திலிருக்கின்ற இந்தியா மாளிகையில் அண்ணு அவர்களுக்கு, ஐ. நா. இந்தியத் தூதுவர் விருந்தளித்தார். அந்த விருந்தில், உலக நாடுகளின் அரசாங்கத் தூதுவர்கள் பலப்பலர் கலந்துகொண்டனர். அந்த நிகழ்ச்சியைக் குறித்து விரிவாகக் குறிப்பிட்டுவிட்டு, மேலே சுட்டிக்காட்டிய நிருபர் பின்வரும் நிகழ்ச்சியையும் வெளியிட்டிருக்கின்றுர்:—

"**அண்ணுதுரையுடன் சேர்ந்து நிற்கவும் பேசவும் ஆசைப்படும் இத்தகைய கூட்டத்தை 'இந்தியா அவுஸ்' இதுவரை கண்டதில்லை**"

என்கிறுர் ஒரு வடக்கத்திக்காரர்!

அந்த வரவேற்பு விருந்து நிகழ்ச்சியில் பங்கு கொண்டிருந்த பர்மியத் தூதரை, நிருபர், **'உங்களுக்கு அண்ணுதுரையைப்பற்றி என்ன தெரியும்'** எனக் கேட்டிருக்கின்றுர்.

அதற்கு அந்தப் பர்மியத் தூதுவர், **'அவர் சென்னையின் ஹீரோ அல்லவா? எல்லாம் சென்னையின் அரசியலைக் கவனித்துக்கொண்டுதான் வருகிறேம்'** என்று குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக எவருடைய விருப்பத்தை நிறைவேற்றிவைக்க—எவருடைய அன்பழைப்பை ஏற்று அண்ணு அவர்கள் அமெரிக்கா சென்றுர்களோ, அந்த யேல் பல்கலைக் கழகத்தில் மாணவர்களுடன் ஐந்து நாள் தங்கியிருந்து, அம்மாணவர்கள் கேட்ட கேள்விகள் அனைத்துக்கும் தக்கவாறு விளக்கமளித்துள்ளார்.

அண்ணுவின் அமெரிக்கச் சுற்றுலாவிலேயே, யேல் பல்கலைக் கழகத்தில் தங்கி இருந்ததும், மாணவர்களுடன் மனம் கலந்து தொடர்ந்து உரையாடியதும் வரலாற்றுச் சிறப்படையதாகும்.

அமெரிக்காவில், தமது அரசியல் கருத்து, மொழிக் கொள்கை ஆகிய ஒன்றையும்—சிலர், தமக்கிருக்கின்ற அரசியல் அரிப்பின் காரணமாக ஆருடம் கூறியதுபோல்—மூடியிட்டு மறைத்துவிடவில்லை. தமிழகத்தில் எது எதைக் கூறிவந்துள்ளாரோ, அதே கருத்துக்களைத்தான் தெள்ளத் தெளிய அமெரிக்காவிலும் அறிவித்திருக்கின்றுர் அண்ணு.

பெரிய பெரிய விவசாயப் பண்ணைகளை அண்ணு அவர்கள் நேரில் கண்டிருக்கின்றுர்.

தமது அமெரிக்க சுற்றுலாவை முடித்துக்கொண்டு, தொழில் துறையில் -- குறைவான காலத்தில் -- மாபெரும் முன்னேற்றத்தைப் பெற்றிருக்கின்ற ஜப்பான் நாட்டுக்கு அண்ணு சென்றுர். தமது உள்ளத்தை எப்பொழுதும் உறுத்திக்கொண்டிருக்கின்ற சேலம் உருக்காலையை நிர்மாணிப்பது குறித்து ஜப்பான் அரசுடனும், தொழில்துறையினருடனும் அண்ணு அவர்கள், கருத்தைப் பரிமாறிக்கொண்டிருக்கின்றுர்.

தமிழகத்தைத் தொழில்மயமாக ஆக்கிவிடவேண்டும் என்பது அண்ணுவின் நீண்ட நாளைய ஆசை. அந்த ஆசையை நிறைவேற்றிவைப்பதில், தாம் மேற்கொண்ட அமெரிக்க – ஜப்பான் சுற்றுலா பெருந் துணைபுரியும் என எதிர்பார்க்கலாம். அண்ணுவின் முயற்சிக்கு, இந்திய அரசின் உடன்பாடு தாமதித்தாவது கிடைத்திடக்கூடும் என எதிர்பார்க்கலாம்.

"**தமிழக முதல் மந்திரியிடம் அமெரிக்காவின் நல்ல மக்கள் மிகுந்த கௌரவமும் நட்பும் காட்டியிருப்பது செய்திகளிலிருந்து தெரிகிறது. முதல் மந்திரிக்கு மிகச் சிறந்த முறையில் உபசரிப்புத் தந்திருக்கின்றுர்கள். காங்கிரசின் 'கியாதி கோஷ்டி' யில் இல்லாத ஒருவர்—காங்கிரசைத் தளர்ச்சி இல்லாமல் எதிர்த்து, இந்தியாவின் மிக முக்கியமான ராஜ்யங்களில் ஒன்றில் ஆட்சிக் கடிவாளத்தைக் கைப்பற்றியுள்ள ஒருவர் — அமெரிக்க மக்களை இவ்வளவு கவர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இதுவரையில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்த காங்கிரசுத் தலைவர்களையே அம்மக்கள் கண்டுவந்திருக்கின்றனர்.**

"**அமெரிக்காவில் திரு. அண்ணுதுரை அவர்கள், மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக விளங்கும் [..]கத்தில் சீரிய முறையில் நடந்துகொண்டிருக்கிறுர். நட்புக்[..]ண்டுள்ள வெளிநாடுகளுக்குப் பிரமுகர்கள் செல்கையில் பின்பற்றவேண்டிய மிகவும் உத்தமமான முறையை திரு. அண்ணுதுரை பின்பற்றி வருகிறுர்.**"

இவ்வாறு அன்பர் ஆச்சாரியார் அவர்கள் சிறப்பித்துக் கூறியிருப்பதைக் கொண்டு, அரசியல் துறையில் அண்ணு அவர்கள் கையாண்டுவரும் முறையின் புனிதத் தன்மையைத் தெரிந்து கொள்ளலாம்.

நம் அனைவரையும் ஒரு திங்களாக விட்டுப்பிரிந்து சென்றிருந்த அண்ணு அவர்கள், தமது அமெரிக்க – ஜப்பான் சுற்றுலாவை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு தாயகம் திரும்பியுள்ளார். அவரைக் காண்பதிலும், அவருடைய இனிய சொற்களைக் கேட்பதிலும் இதுவரை நாம் பெற்றுவந்திருக்கின்ற இன்பத்தை இனி நாம் தொடர்ந்து பெற்றுவருவோம்.

அண்ணு அவர்களை, 'வருக, வருக' என வணங்கி வரவேற்கின்றோம்.

—[illegible]

## பிரிட்டிஷ் அரசியலில் திருப்பம்?

### நகராட்சித் தேர்தல்களில் கன்சர்வேடிவ் கட்சி வெற்றி

இலண்டன், மே 10—

சென்ற முப்பது ஆண்டுகளாக பிரிட்டிஷ் நகராட்சி மன்றங்களில் தொழிற் கட்சி வகித்து வந்த ஆதிக்கம் இன்று சிதறுண்டு விட்டது!

இலண்டன் உட்பட எல்லா நகராட்சிகளிலும் கன்சர்வேடிவ் கட்சிக்குப் பெரும்பான்மை கிடைத்திருக்கிறது.

தொழிற் கட்சி வேட்பாளர்கள் எல்லா இடங்களிலும் முறியடிக்கப்பட்டார்கள்.

கடந்த வியாழக்கிழமையன்று பிரிட்டன் முழுவதிலும் நகராட்சித் தேர்தல்கள் நடைபெற்றன.

1930 முதல் எப்போதுமே தொழிற் கட்சி வேட்பாளர்களையே ஆதரித்து வந்த தொழிலாளர் பகுதிகளில்கூட கன்சர்வேடிவ்கள் வெற்றி பெற்றிருக்கிறுர்கள்.

தொழிற் கட்சி அரசின் கொள்கைகளை பிரிட்டிஷ் மக்கள் புறக்கணித்து விட்டார்களா என்பதே இப்போது எழுந்துள்ள கேள்வியாகும்.

## ஒன்றரை டன் எடை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றரை டன் எடை உள்ள இந்தப் புத்தகத்தை அச்சிட்டு முடிக்க 10 ஆண்டுகள் ஆகும்.

இந்தப் புத்தகத்தில் 610 பகுதிகள் இருக்கும். ஒவ்வொரு பகுதியும் 704 பக்கங்கள் கொண்டதாக இருக்கும்.

அமெரிக்கா, கனடா ஆகிய இரு நாடுகளிலும் உள்ள நூல் நிலையங்கள்--அங்கு கிடைக்கும் நூல்கள் ஆகியவை பற்றிய விவரங்கள் அடங்கிய புத்தகம் இது.

அமெரிக்க நூலகக் குழுவினர் இப்புத்தகம் அச்சிட ஏற்பாடு செய்து, அந்த வேலையை பிரிட்டிஷ் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

12 மிலியன் டாலர் செலவில் அச்சாகும் இப்புத்தகத்திற்காக புதிய அச்சு இயந்திரமே வாங்கியிருக்கிறது அந்தப் பிரிட்டிஷ் நிறுவனம்.

# சிங்கப்பூரில் அண்ணு-- சிறப்புமிக்க வரவேற்பு

## மலேசியப் பிரமுகர்களுடன் சந்திப்பு

சிங்கப்பூர், மே 11—

முதலமைச்சர் அண்ணு அவர்கள், ஹாங்காங்கிலிருந்து விமானம் மூலம் இங்கு வந்து சேர்ந்தார்.

மூன்று மணி நேரம் தாமதமாக இரவு 10-மணிக்கு வந்திறங்கிய போதிலும், விமான நிலையத்தில் அவரை தி. மு. கழகத் தோழர்கள்—பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்கள் உற்சாகமாக வரவேற்றனர்.

இந்தியாவின் ஹைகமிஷனரும், அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் பலரும் எதிர்கொண்டு வரவேற்றனர்.

இந்திய வர்த்தக சபைத் தலைவர் திரு. ஜி. இராமச்சந்திரன், சேர்வராயன்மலை காப்பித் தோட்ட அதிபர் எஸ். பி. இராசன் ஆகியோரும் அண்ணுவை வரவேற்றனர்.

மலேசியாவுக்கு அண்ணு அவர்கள் செல்லவில்லை; எனவே, மலேசியா இந்தியக் காங்கிரசுப் பிரமுகர்கள் சிங்கப்பூருக்கு வந்து அண்ணு அவர்களுடன் உரையாடினர்.

## சேலம் உருக்காலை: அண்ணு நம்பிக்கை

"சேலத்தில் ஓர் உருக்காலை நிறுவவும், தமிழகத்தில் மீன்பிடித் தொழிலை வளர்ச்சியுறச் செய்யவும் ஜப்பானிய அதிகாரிகள் அதிக ஆர்வமுள்ளவர்களாக இருப்பதை அறிந்தேன்; அவர்களுடைய ஒத்துழைப்பு முழு அளவில் கிடைக்குமென்ற நம்பிக்கை எனக்கு இருககிறது"

என்று அண்ணு அவர்கள், சிங்கப்பூருக்கு வந்தவுடன் தெரிவித்தார். மேலும் அவர், இத்தொழில்கள்பற்றி ஜப்பானில் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியது பற்றிக் கூறுகையில் குறிப்பிட்டதாவது:—

"இப்பேச்சுவார்த்தைகள் முன்னேட்டமானவை; இதுபற்றி முடிவு செய்யும் பொறுப்பு மத்திய அரசிடம்தான் இருக்கிறது; இத்திட்டங்கள் பற்றி மத்திய அரசுமூலம் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## விசைக் கலப்பைகள் உற்பத்தி விரைவில் துவங்கும்

"சென்னையிலுள்ள வி. எஸ். டி. நிறுவனத்துடன் கூட்டாகத் தொழில் நடத்தும் ஜப்பானிய நிறுவன அதிபர்களைச சந்தித்து விசைக் கலப்பைகள் தயாரிப்புப் பற்றி நடத்திய பேச்சுவார்த்தை மிகப் பயனுள்ளதாக இருந்தது; விரைவில் இதன் உற்பத்தி துவங்கும்."

## இந்தியர்கள் நிலைபற்றிப் பேச்சு வார்த்தை

சிங்கப்பூர், மே 12—

இன்று அதிகாலையிலிருந்தே நண்பர்கள் பலர் அண்ணுவைச் சந்திப்பதற்கு வரத் தொடங்கி விட்டனர்.

முதலில், 'தமிழ் முரசு' ஆசிரியர் ஜி. சக்கரபாணி அவர்கள் வந்து சந்தித்தார்.

சிங்கப்பூரிலும், மலேசியாவிலுமுள்ள நிலைமைகள் குறித்து நண்பர்கள் பலர், அண்ணுவிடம் எடுத்துரைத்தனர்; பொதுவாக இப்பிரச்சினைகள் பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

## குறைந்த செலவில் கட்டப்படும் வீடுகள் மீது அக்கறை

சிங்கப்பூரில், குறைந்த செலவில் கட்டப்படும் வீடுகள் மிகவும் பெயர்போனவை; அண்ணு அவர்கள் அதில் மிகுந்த அக்கறை காட்டினுர்.

"குறைந்த வருமானக்காரர்களுக்குச் சென்னையிலும் இதுபோன்ற வீடுகள் கட்டிக்கொடுத்தால் எவ்வளவு நன்ருயிருக்கும்?"

என்று அண்ணு அவர்கள், தம்முடன் அளவளாவிய நண்பர்களிடம் தெரிவிக்கையில், அவர்கள் அனைவரும், தாய் நாட்டிலிருந்து வெகு தொலைவில் இருக்கையிலும் அண்ணு செலுத்திய கண்ணேட்டம் கண்டு வியப்பில் ஆழ்ந்தனர்.

# பொன்னி வளநாட்டின் செந்நெல் கொழிக்க உறுதியுடன் செயல்படுவீர்!

## தஞ்சை வேளாண்மைப் பெருங்குடி மக்களுக்கு

## அமைச்சர் ஏ. கோவிந்தசாமி உருக்கமிக்க வேண்டுகோள்

தஞ்சை விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தமிழக அரசின் விவசாய அமைச்சர் திரு. அ. கோவிந்தசாமி அவர்கள் விடுத்த வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது :—

அன்பார்ந்த தஞ்சை உழவர் பெருமக்களே! 1965-ம் ஆண்டு மே மாதத்தில் சிறந்த நெல் வித்தான 'ஆடுதுறை 27' வெளியிடப்பட்டதிலிருந்து, நிச்சயமற்ற காலநிலை, பல சோதனைங்களிலும் நிலைகளிலும் இந்த நெல்லின் சிறப்பியல்புகளை சோதனைக்குள்ளாக்கியதை அறிவீர்கள்.

தஞ்சை மாவட்டத்தின் 441 முன்னணி விவசாயிகள் 5,000 ஏக்கர் நிருபனைப் பண்ணைகளில் இந்த அற்புத நெல்லை வெற்றிகரமாக விளைவித்துத் தமிழகத்தின் மற்ற மாவட்டங்களுக்கு மட்டுமல்லாமல், இந்தியத்துணைக் கண்டம் முழுவதிலும் இந்நெல்லின் அருமை பெருமைகளை எடுத்துக் காட்டியுள்ளனர்.

1965-ம் ஆண்டில், மேட்டூர் அணை ஜூன் திங்கள் 12-ம் நாள் திறக்கப்பட்டதால், 'ஆடுதுறை 27' நெல் சரியான பருவத்தில் நாற்று விடப்பட்டு, 5,000 ஏக்கரில் நடவு செய்யப்பட்டது.

பயிர் நல்ல வீரியத்துடனும் செழிப்புடனும் வளர்ந்த நேரத்தில் பருவமழை குறைந்து விட்டது. அதனால் கொடுமையான வறட்சிக்கு பயிர் உள்ளாகியது.

நாகப்பட்டினம் பகுதியில் தவிர்க்க முடியாத நிலையில் பல விவசாயிகளின் பயிர்கள் ஒரு மாத காலத்துக்கு மேல் வரட்சியால் பாதிக்கப்பட்டுவிட்டன.

இந்த இடையூறையும் மீறி 5,000 ஏக்கரில் 'ஆடுதுறை 27' நெல் ஏக்கர் ஒன்றுக்கு 3,857 பவுண்டு சராசரி விளைச்சல் கொடுத்ததை நீங்கள் பார்த்தீர்கள்.

அதே நேரத்தில், மற்ற ரகங்களுக்குக் கிடைத்த விளைச்சல் 2301 பவுண்டுதான்.

இந்த அனுபவம் தந்த நல்ல நம்பிக்கையினால்தான் அடுத்து வந்த ஆண்டில் இந்த நெல்லை இரண்டு இலட்சம் ஏக்கர் குறுவையில் விரிவுபடுத்தும் திட்டத்தைச் செயல்படுத்தத் தமிழக அரசுடன் தஞ்சை விவசாயிகளாகிய நீங்கள் ஈடுபட்டீர்கள். இதற்கான முன்னேற்ட ஏற்பாடுகள் அனைத்தும் செய்து முடிக்கப்பட்ட கட்டத்தில் இயற்கை நம்மைக் கைவிட்டுவிட்டதை அறிவோம்.

அவ்வாண்டு 21—7—66-ல்தான் மேட்டூர் அணை திறந்துவிடப்பட்டது. இதனால் குறுவை சாகுபடி சிறப்பாக நடைபெறக்கூடிய நாற்பது பொன்னான நாட்களை இழந்தோம்.

இருப்பினும், 'ஆடுதுறை 27' நெல்லின் வெற்றியில் நீங்கள் கொண்டிருந்த ஆழ்ந்த நம்பிக்கையே—குறுவைப் பட்டம் தள்ளிப் போய்விட்டாலும்—சம்பா பட்டத்திலேயே குறுவை நிலங்களில் இந்நெல்லை சாகுபடி செய்யும் துணிவை உங்களுக்குக் கொடுத்தது.

இந்தச் சோதனை போதாதென்று மீண்டும் அறுவடை நேரத்தில் சாதாரணமாக 8 அங்குலம் மழை பெய்யக்கூடிய அந்த மாதத்தில் எதிர்பாராதவிதமாக 28 அங்குலத்திற்குமேல் அடைமழை பெய்து, பெருத்த வேதனையை விளைவித்தது.

அந்தச் சூழ்நிலையில், 'ஆடுதுறை 27' நெல்லுக்குப் பதில், 'ஆடுதுறை 3' அல்லது 'ஆடுதுறை 20' நெல்லைச் சாகுபடி செய்திருப்பீர்களானால், இவற்றை செய்த கொடுமை உங்களுக்கு மிகப் பெரும் நட்டத்தையல்லவா தந்திருக்கும்?

அவ்வாண்டில் ஒரு இலட்சம் ஏக்கரில் 'ஆடுதுறை 20', 'ஆடுதுறை 3' போன்ற இதர ரகங்களைச் சாகுபடி செய்தவர்கள் ஏக்கருக்கு சராசரி 1,200 பவுண்டே கண்டுமுதல் செய்தார்கள்.



ஆனால், 2 இலட்சம் ஏக்கரில், 'ஆடுதுறை 27'—ஏக்கருக்கு சராசரி 3 300 பவுண்டு விளைத்து நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்தது.

இந்த அனுபவமே பின்னர், 1967 ல் அரசாங்கம் மேற்கொண்ட ஒருபோக சம்பா நிலங்களிலும் இருபோக சாகுபடி செய்யும் திட்டத்தை நீங்கள் வரவேற்பதற்கு நல்ல அடிப்படையாக அமைந்தது.

அவ்வாறே, வழக்கத்திலுள்ள இருபோக சாகுபடியை இரட்டிப்பாக்கி பெருமையைத் தேடிகொண்டீர்கள். இது, உழவியல் சரித்திரத்திலேயே எங்கும்—என்றும் — கேட்டும் கண்டுபிடித்த பெரும் சாதனையாகும்

சென்ற ஆண்டும் பருவமழை தவறியதனால், ஜூலைத் திங்கள் 3-ம் நாள்தான் மேட்டூர் அணை திறந்துவிடப்பட்டது.

குறுவை போகத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் வழக்கத்தைவிட மழையும் குறைவு. இருந்த போதிலும், மனந்தளராது இவ்வரிய சாதனையை செய்து முடித்தீர்கள்.

உங்களின் இவ்வரலாற்றுப் பெருமை வாய்ந்த பெருமுயற்சிக்கு சிறப்பளிக்கும் வகையில் எல்லாத் தேவைப் பொருட்களையும் கடன் வசதியுடன் உரிய நேரத்தில் போதுமான அளவிற்குக் கொடுக்கும் பெரும் பணியை அரசாங்கம் செய்து முடித்ததைத் தெரிவித்துக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்வாறு நீங்கள் அசாதாரண சூழ்நிலையிலும் உற்பத்தியைத் தொடர்ந்து கூடுதலாக்கிவருகிறீர்கள். இப்பாராட்டுக்குரிய சாதனையை பெரும் சிரமத்துக்கிடையே நீங்கள் சென்ற பருவத்தில் செய்து முடித்திருக்கும் போது, இவ்வாண்டு இதனிலும் அரிய செயலை சென்ற ஆண்டின் அனுபவத்தின் துணைகொண்டு சாதிக்கப் போகிறீர்கள் என்பதில் எனக்கு திடமான நம்பிக்கை உண்டு.

பாசனத்திற்குத் தண்ணீர் உரிய காலத்தில் திறந்துவிடப்படும் என்ற ஆசை கலந்த நம்பிக்கையுடன் உங்களுக்கு இந்த வேண்டுகோளை விடுக்கின்றேன்.

சாதாரணமாக காவிரி டெல்டாப் பகுதியில் கோடை மாதங்களில் 6-லிருந்து 7 அங்குல மழை பெய்வது உண்டு. இவ்வாண்டு கோடை மழை வழக்கமான அளவைவிட கூடுதலாகப் பெய்திருப்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிட விரும்புகின்றேன்.

ஆகவே, இவ்வாண்டு நல்லதொரு சாகுபடி பருவம் தொடங்க இருக்கிறது என்று நிச்சயமாக எதிர்பார்க்கலாம்

மேட்டூர் அணையில் தண்ணீர் மட்ட அளவு சென்ற பத்து நாட்களில் 12 அடியிலிருந்து 25 அடிக்கு இன்று உயர்ந்து இருப்பதைக் காணும்போது உவகையும் உற்சாகமும் ஏற்படுகிறது.

எனவே, 1968—69-ம் ஆண்டிற்கான வேளாண்மைத் திட்டத்தை நீங்கள் வகுக்கும்போது, தயைகூர்ந்து இனி சொல்ல இருக்கும் கருத்துக்களை நினைவில் கொள்ளும்படிக் கேட்டுக்கொள்கிறேன் :—

1. நீங்கள் நெடுங்காலமாகச் செய்துவரும் இரு போக நிலங்களில் குறுவை சாகுபடியையும், அடுத்து செய்யப்படும் தாளடிக்கான ஏற்பாடுகளையும் எக்காரணத்தை முன்னிட்டும் மாற்றத் தேவை இல்லை.
2. வருகிற ஜூன் 20-ம் நாளுக்குள் வழக்கமான குறுவை நாற்றங்கால் விதைத்து முடித்துவிடுங்கள். இந்தக் கால வரம்புவரை சம்பா நிலங்களுக்கு, 'ஆடுதுறை-27' நெல்லை விதைக்க வேண்டாம்.
3. சம்பாவிற்கு ஜூன் 20-ம் நாள் அளவில் ஆரம்பித்து ஆடி பட்டத்தில் பெரும் பகுதி விதைப்பதுதான் வழக்கம்; ஆகவே, ஜூன் 20-ம் நாளிலிருந்து ஆகஸ்டு 7-ம் நாள்வரையில், நீண்டகால வயதுள்ள சம்பா நெல் ரகங்களுக்குப் பதிலாக, 'ஆடுதுறை 27' ரக நெல்லை சம்பா நிலத்தில் முதல் பயிராக விதையுங்கள்.
4. ஒருவேளை பருவமழை தவறி மேட்டூர் அணை ஜூன் மாத இறுதிக்குள் திறக்கப்பட முடியாமல் போய்விட்டால், வழக்கமான குறுவை நிலத்திற்கும், புதிதாக இரு போகமாக மாற்றப்படும் சம்பா நிலத்திற்கும் 'ஆடுதுறை-27' நெல்லை விதைக்கும் பட்டத்தில் அதிக வேறுபாடு இருக்காது.
5. அந்தச் சூழ்நிலை உருவானால், அதிகபட்சம் எந்த அளவிற்கு நீங்கள் ஒரு போக நிலங்களை இரு போகமாக மாற்ற முடியுமோ அந்த அளவிற்கு மாற்றி குறுவை நிலத்திற்கும் 'ஆடுதுறை-27' நெல்லை விதையுங்கள். இதனை எவ்வாறு செய்வதென்பதை உங்களால்தான் சரிவரத் தீர்மானிக்க முடியும் என்பதோடு, சென்ற ஆண்டு சாதித்ததைப்போலவே இந்த ஆண்டும் நீங்கள் வெற்றிகரமாக செயலாக்கிக் காட்டுவீர்கள் என்பதில் நான் திட நம்பிக்கை கொண்டுள்ளேன்.

உங்கள் இரண்டாம் பயிருக்குத் தேவையான குறுகிய—நடுத்தர வயதுள்ள நெல் ரகங்களைச் சேமித்து வைக்கத் தமிழக அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இவ்வாண்டில் பொன்னி வளநாட்டில் செந்நெல் கொழித்து விளைவு பெருகும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் உழுபடை வீரர்களாகிய உங்களை, 'வீறு நடைபோட்டு ஏர் அணியில் வாரீர், வாரீர்' எனத் தமிழக அரசின் சார்பில் அன்புடன் அழைக்கிறேன்."

## பாகிஸ்தான் மக்கள் தொகை உயர்ந்துவிட்டதாம்

1951-ல் ஏழரை கோடியாக இருந்த பாகிஸ்தான் மக்கள் தொகை, இப்போது பன்னிரண்டு கோடியாக உயர்ந்துவிட்டதாம்!

## மத்திய அரசின் நிறுவனங்களில் ரூ. 22.36 கோடி நட்டம்

புதுடில்லி, மே 10—

மத்திய அரசு நடத்தும் நிறுவனங்களில் 1966—67-ல் ரூ. 22 36 கோடி நிகர நட்டம் ஏற்பட்டிருக்கிறது

இவைகளில் முந்திய ஆண்டில் ரூ. 10 06 கோடி இலாபம் கிடைத்தது.

இந்துஸ்தான் ஸ்டீல் நிறுவனத்தில் தான் அதிக நட்டம்!

இந்துஸ்தான் ஸ்டீல் நிறுவனத்தில் 1966—67-ல் ரூ. 20.56 கோடி நிகர நட்டம் ஏற்பட்டிருக்கிறது; அதில், முந்திய ஆண்டில் ரூ. 1.66 கோடி இலாபம் கிடைத்தது.

மற்றுமுள்ள 43 அரசுத்துறை நிறுவனங்களில் மொத்தம் ரூ. 1.8 கோடி நட்டம் ஏற்பட்டது; இவற்றில், 1965—66-ல் ரூ. 8.4 கோடி இலாபம் கிடைத்தது.

நிர்மாணிக்கப்பட்டு வருபவை உட்பட மொத்தம் 77 நிறுவனங்களில், 1967 மார்ச் 31-ம் நாள் வரையில் முதலீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 2,841 கோடி; 1965—66 இறுதியில் செய்யப்பட்டிருந்த முதலீடு ரூ. 2,415 கோடி; இது, கடந்த ஆண்டில் ரூ 425 கோடி அதிகரித்தது.

## கருணாநிதி பிறந்த நாள் சிறப்பு மலர்

சென்னை, மே 9—

பொதுப்பணித்துறை அமைச்சர் கலைஞர் கருணாநிதி பிறந்த நாள் மலரை உருவாக்கும் முயற்சியில் திரு. இளமுருகு பொற்செல்வி ஈடுபட்டிருக்கிறார்.

6—6—68 அன்று சென்னை பாலர் அரங்கில் மலர் வெளியீட்டு விழா நடைபெறும்.

மலரில் மாண்புமிகு கருணாநிதி அவர்களது இயல்புகளை விளக்கிப் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், திரையுலகத் தாரகைகள், கவிஞர்கள் எழுதுகிறார்கள்.

அமைச்சர் முத்துச்சாமி, கவிதையாக வடித்து இருக்கிறார். முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம், மூதறிஞர் இராஜாஜி, பெரியார், சுத்தானந்த பாரதியார் ஆகியோரும் எழுதியுள்ளனர்.

கலைஞருடைய பல்வேறு வாழ்க்கை நிகழ்ச்சிகள் படமாகத் தொகுக்கப்பட்டு வருகிறது.

"மொத்தத்தில் சிறப்பு மலர், மணம் வீசும் பூங்கொத்தாகச் சுவைக்க சுவைக்க இனிக்கும் அடிக்கரும்பு போன்று அமைய இருக்கிறது" என்று மலர்க் குழுச் சார்பில் அறிவிக்கப்படுகிறது.

# 'சேது சமுத்திரத் திட்டம்--விரைவில் செயல்படுத்துவது அவசியம்'

## 'இதற்காகும் செலவு நியாயமானதே'

### 'வருமானம் பெருகும் --- அந்நியச் செலாவணி கிட்டும்'--- அதிகாரிகளின் ஆய்வு அறிக்கை தரும் விளக்கம்

சென்னை, மே 9—

சேது சமுத்திரத் திட்டம்பற்றி ஆய்வு நடத்திய அதிகாரிகளின் இறுதி அறிக்கை விரைவில் மத்திய அரசிடம் தாக்கல் செய்யப்படவிருக்கிறது.

சேது சமுத்திரத் திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட வேண்டுமென இவ்வறிக்கையில் வற்புறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

'இந்தியாவின் கிழக்குக் கரையிலிருந்து மேற்குக் கரைக்கும், மேற்குக் கரையிலிருந்து கிழக்குக் கரைக்கும் செல்லும் தொலைவைக் குறைப்பதற்காக, பாக் ஜலசந்தியையும்—மன்னார் வளைகுடாவையும் இணைக்கும்வண்ணம் இராமேசுவரம் தீவுக்கு ஊடே ஒரு கால்வாயை வெட்டுவது தொழில் நுட்ப ரீதியில் இயலக்கூடியதே"

என்று இந்த 140 பக்கங்கள் கொண்ட அறிக்கையில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

"வரும் ஆண்டுகளில் போக்குவரத்து சக்தி அதிகரிக்கும்; எனவே, அந்த அடிப்படையில், இதற்காகும் செலவு நியாயமானதேயாகும்.

"சேது சமுத்திரத் திட்ட ஆய்வு வேலைகள் முடிந்துவிட்டன. மொத்தம் இதற்கு ரூ. 36 இலட்சம் செலவாகியுள்ளது. அதற்காக வந்திருந்த அலுவலர்களும் தத்தம் சொந்த இலாகாக்களுக்குத் திரும்புகின்றனர்.

"தற்போது இலங்கையைச் சுற்றிவரும் கப்பல்கள்—சேது சமுத்திரத் திட்டம் உருவானால்—அக்கால்வாய் வழியாகவே வரும்; அதனால் சென்னைக்கு வருவதற்கு முந்நூறு மைல் பயணம் மிச்சமாகும்.

"அக்கப்பல்கள், தூத்துக்குடித் துறைமுகத்தில் நின்று வந்தால் அத்துறைமுகத்திற்கு இலாபம் என்பதுபோக, சுற்றி வரவேண்டிய பாதை அளவும் மேலும் குறையும்.

"நான்காம் திட்ட காலத்தில் தேசிய வருமானத்தில் ஐந்து அல்லது ஆறு சதவிகித உயர்வு ஏற்படுமெனத் திட்டக் குழுவினர் கருதுகின்றனர்; ஆனால், இந்தியாவின் உலக வணிகத்திலும் கரையோர வணிகத்திலும் கணிசமான அளவு உயர்வு ஏற்படாவிடின், இந்தத் தேசிய வருமானப் பெருக்கம் சாத்தியமில்லை.

"கடற்கரையோர வணிகம் முழுவதும் இந்தியக் கலங்களாலேயே செய்யப்படுகின்றன. ஆனாலும், அது இந்தியாவின் மொத்த வணிகத்தில் கால் பங்காகவே உள்ளது.

"இந்தியாவின் உலக வணிகத்தில் பெரும் பகுதி அந்நியக் கலங்களாலேயே நடக்கின்றன; எனவே, அவை சேதுசமுத்திரத்தின் வழியாக வருகையில், அத்திட்டத்தின் வருமானம் பெருகும்; அதிலும், அந்த வருமானம் அந்நியச் செலாவணியில் கிட்டும்.

"மேலும் கடந்த பதினைந்தாண்டுகளில் இந்தியாவின் மிகப் பெரிய துறைமுகங்கள் போக்குவரத்தில் ஆறுமுதல் எட்டு சதவிகிதம்வரை ஏற்றம் காட்டியுள்ளன. இந்த அடிப்படையில், சேதுசமுத்திரத் திட்டம் நிலைக்கக்கூடியவண்ணம் வருங்காலத்தில் போக்குவரத்துச் சக்தி கூடும்."

## ஒன்றரை டன் எடையுள்ள புத்தகம்!

### அச்சிட்டு முடிப்பதற்கு 10 ஆண்டுகள் ஆகுமாம்

உலகிலேயே மிகவும் பெரிய—கனமான—புத்தகம் ஒன்றை அச்சிடத்துவங்கியுள்ளது ஒரு பிரிட்டிஷ் நிறுவனம்.

(2-ம் பக்கம் பார்க்க)

# வருக அண்ணு---வருக! வாழ்க அண்ணு---வாழ்க!

இருபத்தேழு நாட்கள் திருவிடத்தின் இன விளக்கைத் திக்கெட்டும் ஒளிரவைத்துத் திரும்பிவரும் பேரறிவே! பெருந்திருவே! அறிஞர் அண்ணு அவர்களே! 'வருக, வருக' என வரவேற்கிறோம்.

பெருவாழ்வு வாழ்ந்திட்ட பூந்தமிழர் மறுவாழ்வின் தலை யூற்றே! ஆராயாத நம்பிக்கைகளில் அழுந்திச் சோர்ந்த மண்ணிலே இருந்து அறிவே—ஆராய்ச்சியே மூச்சாய்க் கொண்ட அமெரிக்க – ஜப்பான் நாடுகள் சென்று திரும்பும் அண்ணு வருக!

அமெரிக்கரல்லாத வேறு யாருக்குமே கிட்டாத யேல் பல்கலைக் கழகத்துப் பெருஞ்சிறப்பை உழைப்பாலே பெற்று உயர்ந்திட்ட முதற் குடிமகனே வருக! வருக!

சனநாயகத்தின் புதுப் பொருளை உலகுக்குச் சொல்ல வந்த அருளுருவே! நீர் முகமூடி போட்டுச் செல்வீர் என்று சொன்ன பொருமைக்காரர்களின் முகமூடி கிழித்துத் திரும்புகிறீர்—வருக! வாழ்க!

அண்ணு! தென்னுட்டார் மட்டுமன்றி பன்னுட்டார் பலரும் பார்த்துப் பேசிட விரும்பினுர்களாமே தங்களை, அந்தச் சேதி எங்களுக்குத் தேனுய் இனித்தது அண்ணு!

ஆலைகளை — தொழிற்சாலைகளைப் பார்ப்பதைவிட, வேளாண் பண்ணைகளையே தாங்கள் காண விரும்பிய விருப்பம், தாங்கள், தமிழ் மண்ணின் வளர்ச்சிக்குப் புது வழிகள் காணத் துடித்த துடிப்பு என்றே மதிக்கிறோம்!

கூட்டாட்சி அமைப்பு முறையில் மத்திய – மாநில அரசு உறவு பற்றித் தாங்கள் அறிவித்த கருத்துக்கள் டில்லியிலே புதிய சிந்தனையை உருவாக்கியிருக்கின்றன வாமே! பின் ஏன் அண்ணு—எங்களுக்கு மகிழ்ச்சி இராது?

தங்கள் தலைவன் மார்ட்டின் லூதர் கிங் சுட்டுக் கொல்லப்பட்டதாலே சூடேறிக் கொதித்திருந்த நீக்ரோவர் வாழும் நியூயார்க் நகரின் 'ஆர்லம்' பகுதிக்கு நடந்தே சென்று பார்த்தீர்களே, உங்கள் துணிச்சல்......அதைவிட, வதை படும் மக்கள் வதைபடப்பாடுபடும் தங்கள் மனத் துடிப்பு......நினைத்தால் புல்லரிக்கிறது, அண்ணு!

வள்ளுவர் குறளை–காப்பியர் இலக்கணத்தைக் கையிலே கொண்டு சென்று வேற்று நாட்டாருக்குப் பரிசாக அளித்திருக்கிறீர்களே அண்ணு -- அது போதும் -- தாங்கள் தமிழுக்குச் செய்யும் தொண்டை விளக்க! யேல் பல்கலைக் கழக மாணவருக்குக் குறள் வகுப்பும் நடத்தினீர்களாமே அண்ணு!

தக்காரைத் தெரிந்தெடுத்துத் தக்கவாறு சிறப்புச் செய்த அமெரிக்கரின் வேளாண் பண்பு,

**'தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தற் பொருட்டு'**

என்ற குறளையே நினைவுபடுத்துகிறது!

உங்களை ஆழம் பார்க்க நினைந்து விஷமத்தனமாய்க் கேள்வி கேட்டவர்கள் வாயடைக்கும்படி பதில் சொன்ன சமயோசிதத்தை உலகம் வியந்தபோது, உங்கள் தம்பியர் அடைந்த பூரிப்பை எப்படி அண்ணு சொல்லில் வடிக்க?

தாங்கள் உதிர்த்த சொல் ஒவ்வொன்றிலும், விட்டுக்கொடுத்தல்—கூட்டுழைப்பு—பொதுநலவுணர்வு—தியாக மனப்பான்மை—தொலைநோக்கு அத்தனையும் தெளிவாக இருந்தனவே அண்ணு!

உலகத்து மேதைகளோடு உங்களை ஒப்பிட்டபோதெல்லாம், மனம் வெதும்பித் துடித்த காங்கிரசுக்காரருக்குத் தங்கள் பேரறிவின் அகலமும் ஆழமும் இப்போதாது புரிந்திருக்குமா அண்ணு!

27 நாட்கள்–பல்லாயிரம் மைல்கள்–எங்களுக்கு இரவென்றுல் உங்களுக்குப் பகல்–நாங்கள் நிலவை வரவேற்கும்போது நீங்கள் உதயசூரியனைக் காண்பீர்கள்–இவ்வளவு இருந்தும், தங்கள் நினைவை எங்கள் நெஞ்சக் கமலங்களில் இருத்தி, தங்களைப்பற்றி நித்த நித்தம் எங்களுக்குச் சேதி சொன்ன அமெரிக்கத் தகவல் நிலையத்துக்கு நாங்கள் எப்படி அண்ணு நன்றி சொல்லப்போகிறோம்?

'என் நாட்டு மக்களின் வளர்ச்சித் திட்டங்கள் பற்றிப் பேசிட என் பயணத்தில் 3 நாட்களைக் குறைத்துக்கொள்கிறேன்' என்று சொல்லிப் பறந்தோடி வந்துசேர்ந்த உங்களைச் சென்னைத் திருநகரம் இன்று பூரிப்போடு வரவேற்றுக் கொண்டிருக்கிறது.

**'உலகமெங்கும் வாழ்ந்துவரும் நாற்கோடித் தமிழ்க் குலத்தின் நலந்தேடி நீங்கள்' என்று ஆரவாரமும் ஆர்ப்பரிப்புமாய்த் தமிழகமே திரண்டு நின்று உங்களை வரவேற்கையில், எங்கோ ஒரு மூலையில் கிடந்து, தன் உருவம் சிறிது எனினும், பெரிய இதயம் மலர நின்று 'நம் நாடு' உங்களை வரவேற்கிறது! வாழ்த்துகிறது!**

பாமர மக்களின் பெருந்தலைவா! நீர் பார் சுற்றிப் பெற்ற பட்டறிவு, பைந்தமிழ் மண்ணின் ஊர்தோறும் மணந்து வளஞ்சேர்க்க இருக்கும் சிறப்பை எண்ணி 'நம் நாடு' இறும்பூதெய்துகிறது!

வருக அண்ணு -- வருக! வாழ்க அண்ணு -- வாழ்க!

அண்ணு! தமிழகத்துத் தலைவராக இருக்கும் தாங்கள் இந்தியத் தலைவராகவும், உலகத் தலைமையில் பங்கு பற்றவும் தங்களை ஆற்றுப்படுத்தவும் இந்தப் பயணம் கழகத்துக்கோர் நல்வாய்ப்பு என்று 'நம் நாடு' நம்புகிறது!

வருக அண்ணு -- வருக! வாழ்க அண்ணு -- வாழ்க!

# வளங்கள் பல இருந்தும் வெற்றிபெற இயலவில்லை

## 'ஒரு கட்சி ஆதிக்கம் இனி இந்தியாவில் நிலவ முடியாது'

### பொதுத்தேர்தல் தந்துள்ள படிப்பினை---ஹாங்காங்கில் அண்ணு தெளிவுரை

ஹாங்காங், மே 11—

"'ஒரு கட்சி ஆதிக்கம், நாட்டின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்திவருகிறது' என்று இந்திய மக்கள் அஞ்சிக்கொண்டிருந்தனர்; கடந்த தேர்தல் முடிவுகள், 'இந்தியாவில் உண்மையான சனநாயகம் நிலவ இயலும்' என்ற நம்பிக்கையை மக்களிடம் ஏற்படுத்தியிருக்கிறது.

'மத்திய அரசுடன் வாதிட்டுக் கோரிக்கைகளைப் பெறுவதில் மற்றவர்களைவிட திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு அதிக வாய்ப்புக்கள் உண்டு!

"இயற்கை வளமும், அறிவு வளமும், உழைப்பதற்கான மக்கள் வளமும் ஏராளமாக இருக்கின்றன எனினும், நாங்கள் இன்னும் முழு வெற்றி பெற முடியவில்லை. சில் துறைகளிலும் நாங்கள், எங்களுடைய முழு வளத்தையும் பயன்படுத்திக்கொள்ள இயலவில்லை"

என்று அண்ணு அவர்கள், ஹாங்காங்கிலுள்ள இந்திய வர்த்தகச் சபையிலும், தமிழ்க் கலாசார சங்கத்திலும் அளிக்கப்பட்ட வரவேற்பில் உரையாற்றுகையில் விளக்கிக் கூறினுர். மேலும் **அவர்,** பல பிரச்சினைகள் குறித்து விளக்கியதாவது:—

### இந்தியா முன்னேற முதலீடு செய்யுங்கள்!

"வெளிநாடுகளுக்கு வந்துள்ள இந்தியர்கள், பல துறைகளிலும் வெற்றிகளை அடைந்துள்ளனர்; எனவே அவர்கள், உள்நாட்டில் அத்தகைய வெற்றிகளை ஈட்டுவதற்கு எவ்விதத் தடையும் இருப்பதற்கில்லை. வெளிநாட்டிலுள்ள இந்தியர்கள், தாய்நாடு திரும்பும்போது, தங்களுடைய மூலதனத்தையும் அறிவையும் செலுத்தி, இந்தியா முன்னேற்றம் அடைய உதவி செய்ய வேண்டும்.

### வாய்ப்புகள் உண்டு---வரம்பும் இருக்கிறது!

"தமிழ் நாட்டில் அமைதியான சூழ்நிலை நிலவுகிறது; தொழிலாளர் ஊதியம் குறைவானதாகும்; தொழில்—பொருளாதார வளர்ச்சிக்கு வாய்ப்புகளை மிக நன்ருக இருக்கின்றன,

"தமிழக அரசு லைசென்சுகள் வழங்குவதற்கு வரம்பு உள்ளது என்பதை ஒப்புக்கொள்கிறேன். அந்நியச் செலாவணிப் பொறுப்பு மத்திய அரசியலில் இருப்பதே இதற்குக் காரணமாகும்; எனினும், திட்டங்கள் நியாயமானவையாக இருந்தால், மத்திய அரசுடன் நல்ல முறையில் பேரம் பேச நான் முயற்சிப்பேன்.

### சுமூக உறவு நிலவுகிறது

"காங்கிரசு அல்லாத அரசாக இருப்பதால், அதிக அளவு காரியங்களை நிறைவேறச் செய்ய இயலும்; தலைமையமைச்சர் இந்திரா காந்தியுடன், நான் மிக சுமூகமான உறவு கொண்டிருக்கிறேன்.

"இங்குள்ள பணம் படைத்த இந்தியர்கள் பல்வேறு தொழில் திட்டங்களைப் பற்றித் தங்களது பிரேரணைகளை அனுப்புவரென நம்புகிறேன்; அப்போதுதான் மத்திய அரசுடன் விவாதித்து நான் அனுமதி பெறமுடியும்.

### வேதனைக்கு இடம் தராதென நம்புகிறேன்

"சேலம் உருக்காலை நான்காவது திட்டத்தில் இடம் பெறவேண்டும் என்பது தமிழக அரசின் நிலை; ஏதாவது ஒரு காரணத்தினுல் இதனை நான்காவது திட்டத்தில் மத்திய அரசு சேர்க்காவிடில், தமிழக மக்கள் பெரிதும் வேதனையடைவர்; பாரபட்சம் காட்டுவதாக மத்திய அரசைக் குற்றஞ்சாட்டுவர்.

"'அந்நிய ஒத்துழைப்புடன் சேலம் உருக்காலை வேலையைத் துவங்கலாம்' என்று மத்திய அரசைத் தமிழக அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது. இரு ஆண்டுகளுக்கு முன்பு விண்ணப்பம் அனுப்பப்பட்டது; பதில் எதுவும் வரவில்லை.

"ஜப்பானியத் தொழிலதிபர்களுடன் பேச்சு நடத்தியதில், அந்நிய ஒத்துழைப்புக்கு அதிக வாய்ப்புள்ளதை அறிந்தேன்."

"இத்திட்டத்தை மத்திய அரசு மீண்டும் ஒத்திவைத்தால் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறீர்கள்?' என்று கேட்கப்பட்டபோது, அண்ணு அவர்கள், 'இந்தக் கட்டத்தில் மேற்கொண்டு ஏதும் வலியுறுத்துவதற்கில்லை; பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்' என்றுர்.

"இந்தியாவிலேயே தமிழக அரசை சிறப்பானதாகவும், அதிகக் கவர்ச்சிகரமானதாகவும் விளங்கச் செய்ய உறுதி கொண்டிருக்கிறோம்" என்று முதலமைச்சர் குறிப்பிட்டார்.

இரண்டு அல்லது மூன்று ஓட்டல்களையும், சில பயணிகள் விடுதிகளையும் நிர்மாணிக்கும் தமது திட்டங்களையும் அவர் குறிப்பிட்டார்.

'லட்டரி' திட்டம் விரைவில் அமுலாக்கப்படும்; அதன்மூலம் கூடுதல் வருமானம் தமிழகத்திற்குக் கிடைக்கும் என்றும் அவர் சொன்னுர்.

ஆனுல், 'மதுவிலக்கு ரத்து இல்லை' என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

## இன -- நிற வேற்றுமை

### அறவே ஒழிக்கிறது பிரிட்டன்!

பிரிட்டிஷ் நாடாளுமன்றமான மக்களவையில் தாக்லாகியுள்ள புதிய இன ஒற்றுமை மசோதா 'இங்குள்ள மக்கள் அனைவருக்கும் எல்லாத் துறைகளிலும், எந்தப் பாகுபாடும் இல்லாமல் சம வாய்ப்பு அளிக்கும்' என்று பிரிட்டிஷ் தலைமையமைச்சர் வில்சன் கூறினுர்.

"இந்தச் சட்டத்தால் பிரிட்டனிலும் நிறவெறி இருக்கிறது என்ற தவருன எண்ணம் துடைக்கப்பட்டுவிம்" என்று அவர் மேலும் கூறினுர்.

பர்மிங்காம் நகரில் நடைபெற்ற மே விழாக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் திரு. வில்சன் மேலும் கூறியதாவது:—

"மக்கள் சபைக்கு வந்துள்ள மிக முக்கியமான மசோதாக்களில் தலையாயது இதுதான். 'சுமுகமான நல்லுறவுடன் எல்லா இன மக்களும் வாழ வேண்டும்' என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் இந்த மசோதா கொண்டுவரப்படுகிறது. பல இன மக்களும் இணைந்து வாழும் பிரிட்டன் போன்ற நாடுகளில், அவர்களிடையே சுமுகமான உறவு நிலவவில்லையெனில் அது அனைவருக்குமே ஆபத்து.

மசோதா நிறைவேறிவிட்டால், வேலை வாய்ப்பு — குடியிருப்பு — மற்றும் சமுதாய உறவு போன்ற பலவகைகளிலும் எந்தவித மோதலும் எப்போதும் ஏற்பட வழியில்லாமல் போய்விடும்.

"தலைசிறந்த நாடாகப் பிரிட்டன் நீண்டகாலமாக இருந்துவருகிறது. தொடர்ந்து அந்தப் புகழுடன் நாம் இருக்க வேண்டுமென்ருல், இன வேற்றுமை ஒழிக்கப்படவேண்டும். அதற்கான முயற்சியில்தான் நானும், எனது அரசும் ஈடுபடுவோமே தவிர, நமது பாரம்பரியப் புகழ் குன்றுமளவுக்கான நிகழ்ச்சிகள் நடைபெற அனுமதித்துவிட்டு ஒதுங்கியிருக்க மாட்டேன்."

### வருந்துகிறோம்

லோட்டஸ் பி இராமசாமி அவர்களின் அன்னையார் 12—5—68-ல் இயற்கை யெய்தினுர் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24 சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.